
பெரிய கோவிலும் : :



: : : தஞ்சாவூரும்.

இரண்டாம் பதிப்பு] 1954. [விலை அணா 10.

பாரதமணித் திருநாட்டின்
பழம்பெருமைக்குச் சான்று

★

பெரியகோவிலும்
புலவர் மெச்சுகின்ற
ஸரஸ்வதீமஹாலும்

★

பண்பும் பக்தியும்
புதுமெருகுடன் பரவிவரும்
புதுயுகத்தில்


புதுமையும் பண்பும் துலங்க
பெண்களும் ஆண்களும் விரும்பும்

பலவித பட்டாடைகளும்
புதிய ஜவுளிகளும்
வாங்க வாரீர்.

ஸ்ரீ லலிதா மஹால்

பட்டு ஜவுளி வியாபாரம்,
தெற்கு வீதி, :: தஞ்சாவூர்.

பெரிய கோவிலும்



2495

தஞ்சாவூரும்.

(இரண்டாம் பதிப்பு)

1954.

உ

முருகனே துணை.


சிற்றுரை.

பூவிற் சிறந்த நாடு; பொன்னாடு; புகழ் மலிந்த புவித நாடு; போற்றுவார் போற்ற புதுமை மலிந்து புகழுநாடு; பொன்னியாறு தன் மணலையெல்லாம் பொன்னாகக் காட்டிச் செந்நெல் விளைந்தோங்கிச் செழிக்கும் வளநாடு; தஞ்சம் என்போரை அஞ்சே லென்னும் தஞ்சை மாநாடு. எத்துணை யெத்துணைச் சிறப்புப் பொருந்தியதென்று இயம்ப முடியாத அத்துணைச் சிறப்பும் கொண்ட இந்நாட்டை, முந்நாள் பன்னாடுகளையும் வென்றி கொண்ட முதலாம் இராஜராஜ சோழன் அரசாண்டு, அன்றும் இன்றும் என்றும் அணையா விளக்கென ஐந்து கண்டங்களும் புகழ எடுத்த தஞ்சை இராஜராஜேஸ்வரமுடையாரின் பேரம்பலமாம் பெருந் திருக்கோயிலை அறியாரோ ஆவல் கொள்ளாரோ இல்லையென்னற் பொருந்தும். ஆயினும் இப்பெருங் கற்றளியில் மற்றோர் போன்று நமக்கும் இருக்கும் ஆவல் காரணத்தானே முன்னை இருமுறைப் புத்தக வடிவிலும், அவ்வப்போது அமயம் நேர்ந்துழி, வேறு சிலவற்றை எழுதும்போது தஞ்சைக் கோயிலின் சிறப்பினை ஒருவாறு சேர்த்தே எழுதுவதும் வழக்கமாக நமக்குண்டு. நாம் வெளியிட்ட சில புத்தகங்கள் பொதுவாக அன்பளிப்பாகவே ஏற்படுதலான் இதில் அனேக தொழில் விளம்பரங்களைச் சேர்க்க நேர்ந்தது. ஆராயு வல்லுனர் இன்னும் பெரிதான புத்தகங்களை வெளியிடுவார்களென நம்பி, பல பணிகளிலும் ஈடுபாடுடைய நாம் இதை முடிந்த அளவில் வெளியிட்டிருக்கிறோம். அறிவுடையார்களும் அன்பர்களும் ஏற்க.

K. V. P.
வெற்றிவேல் பிரஸ்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர்
28—1—54


கோவில்.



(வெளிப்புற வடகிழக்குத் தோற்றம்.)

மன்பதை தோன்றிய மக்களின் சரீரமாகிய கோவிலின் சாயா சித்திரங்களே புறத்தே காணும் திருக்கோவில்கள் பலவும். யோகிகள், முனிபுங்கவர், ஞானிகள் பலரும் அவ்வப் போது ஆலயங்களில் புகுந்து இறைவனை வழுத்திச் செல்வார்களாதலான், அன்னார்களின் பரிசத்தால் இடன் தூய் மையுறுவதோடு ஆலய வெளியில் அவர்களது பரிசுத்த எண் ணங்கள் அணுவுக்கணுவாய்ப் பிரிந்து நிறைந்து இயங்கும். அத்தன்மையோரின் வழிபாட்டானும், சிற்பியின் தெய்விக சக்தியானும் மூலவிக்ரகங்கள் எழில்பெற்று விளங்கும். ஆகவே ஆலய வழிபாட்டை அநுதினமும் சிரத்தையுடன் செய்து வருவோர் மனத்தை ஆங்கு நிறைதூய எண்ணங்கள் தாக்கி ஊக்கந்தர மூர்த்திகரம் மிக்க சிலைகளும் அன்னருக்கு அனுக் கிரகம் செய்ய உள்ளும் புறனும் ஒத்து சாக்ஷாத்காரம் வாய்த்து சிறந்த அனுபூதிமான்களாய்த் திகழ்வது திண்ணம் "கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் காற்களாற் பய னேன்" எனும் சான்றோர் முதுமொழியும் உண்டு.

கட்டை ஏறினர். இவர்களுக்குக் குந்தவை என்ஒருர் பெண்ணும், இரண்டாம் ஆதித்ய கரிகாலன் அருண்மொழித் தேவன் என்றிரண்டு மகனும் ஆக மூவரிருந்தனர். தந்தையான சுந்தரச் சோழன் அரசுரிமையை மைந்தனுன இரண்டாம் ஆதித்ய கரிகாலனிடம் ஒப்படைத்து தான் சிற்றம்பலத்துச் சிவனை வழுத்த அங்கு சென்றுவிட்டான். இது




(முன்புற மற்ஒருரு தென்கிழக்குத் தோற்றம்)

போது சுந்தரச் சோழனின் தம்பியாகிய மதுராந்தகச் சோழனின் அரசுரிமை ஆவல் காரணைத்தாலோ பிறவற்ருலோ ஆதித்ய கரிகாலன் உடல் நீத்தான். அதுபோது அரசுரிமைக்குத் தகுதியான நமது முதலாம் இராசராச சோழன் தன் சிற்றப்பனின் எண்ணம் பூர்த்தியாமாறு அன்னுனுக்கு முடிசூட்டி தான் இளவரசனுயிருந்தான். மதுராந்தகனின் ஆட்சி சில ஆண்டுகளே போக 986 சூன் அல்லது சூலை மாதம் 25-ந் தேதியாகிய நன்னுளில் நமது மன்னர் மன்னன் முதலாம் இராஜராஜ சோழன் சிங்காதன மேற்றுன். சில ஆண்டுகள் நாட்டின் நலனைக் கவனித்து, படைபலம் பலவற்றைச் சேர்த்துப் பிறநாடுகளையும், தீவுகளையும் தன் ஆணையின்கீழ்

கோவில் கட்டிய சோழ மன்னன்.

சூரியகுலத் துதித்தவரும், வேதகாலத்திற்கு முற்பட்டவரும், படைப்புக் காலந்தொட்டு இருப்பவரும், சரித்திராரம்பத்திற்கு முற்பட்டவரும், பாரதப் போரில் தருமனுக்கு உதவி புரிந்தவரும், வள்ளன்மை சமயப்பற்று இவைகளில்



(பின்புற தென்மேற்கு மூலைத் தோற்றம்)

உலகப் பிரசித்திப்பெற்றவரும், கோவில்கள் பலபல அமைத்து மகிழ்ந்தவரும, அன்றும் இன்றும் புகழுதற்கிலக்காய் தமிழகத்து அரசு புரிந்தவர்களும் சோழர் பெருமக்களே யாவர். எனினும் விசயாலய சோழர் காலத்திருந்தே சோழர் பரம்பரை நன்கு புலனாகுமெனக் கூறுவர் ஆராய்ச்சியாளர்.


இச்சோழன் மரபில் இரண்டாம் பராந்தகன் — சுந்தரச் சோழன் — பொன்மாளிகைத்துஞ்சினதேவன் எனும் பல நாமங்கள் கொண்ட இவ்வொருவனே சிவபத்தியிற் சிறப்புடையான் என்பது பொருந்தும். இவன் உயிர் நீத்தகாலை இவனது பட்டமகிஷி வானவன்மாதேவியாரும் உடன்

கொண்டுவந்து மும்முடி பூண்டு அரசுபுரிந்தான். இவன் தன் அரசாட்சி 28 ஆண்டுகளே எனினும், 19-ம் ஆண்டில் சிதம்பரத்திற்கு நிபந்தங்கள் பல இயற்றி வழிபட்டமை காரணத்தான் அங்குள்ள அந்தணர்களால் இராசராசன், சிவபாதசேகரன் என்னும் பட்டமும் பெற்று, அப்பெயர் காரணத்தால் தஞ்சையில் இராஜராஜேச்சுரத்தை கி. பி. 1003-லிருந்து 1009 வரை எடுத்து முடித்தான். இவன் ராஜேஸ்வரத்தில் வைத்திருந்த மாளாக் காதற் குறிகுறியாய் இவன் விட்ட நிபந்தங்களும், பொன்னுபரணங்களும், பூசைக்கலன்களும் பிறிதோர் பக்கங் காண்க.

இராஜராஜேஸ்வரம்.

இராஜராஜேஸ்வரமென்பது பழங்காலத்து ஓர் நகரமாயிருத்தல் வேண்டும் என்றே யூகிக்க இடமிருக்கிறது. ஏனெனில் இற்றைக்கும் அண்மையில் பல கிணறுகளும் செங்கற் கட்டிடச் சிதைவுகளும் காணப்படுகின்றன. இராஜராஜேஸ்வரத்துப் பெரிய கோவிலானது சுற்றிலும் மலை போன்ற பெரிய மேடுகளாலும் சுற்றிலும் காடுகள் போன்ற மரஞ்செடி கொடிகளாலும் அகழி சூழப்பெற்றும் உயர்ந்த மதில்களாலும் சூழப்பெற்றது. நால்வகை அரண்களால் காக்கப்படுவது போன்றும், கோபுரம் வண்ணமாடங்கள் பல பல ஒன்றுசேர்ந்தாற்போல் வானுற ஓங்கிநின்று காண்போரின் கண் நிறைந்தும், வருவோரை வருகவென்று கூப்பிடுவதுபோன்றும் இலங்கும். இப்பெருந் தூய காக்ஷியைக் கண்டனுபவிக்க வேண்டுமேயன்றி, சொல்லுவதும், எழுதுவதும் அத்துணைப் பொருத்த முடையனவன்று. இக்கோவிலைக் கண்டு இறும்பூதெய்தா மக்கள் மாநிலத்திலையென்னல் சாலப் பொருந்தும் அடிமுதல் உச்சிவரை கருங்கல்லால் கட்டப்பெற்ற இதன் சிறப்பு இதைக் கட்டிய சோழ மன்னனையும் சிற்பிகளையுமே சாரும். இது அளவையே பிரதானமாய்மட்டும் கொண்டதல்ல அழகையும் பிரதானமாய்க்

கொண்டதே. இக்கற்றளி மன்னனது 25ம் வயதில் அதாவது கி.பி 1003ல் ஆரம்பித்து 1009ல் முடிவுபெற்றது. தென்னாட்டில் ஏன் இந்தியாவிலேயே முதன்முதல் முழுதும் கருங்கல்லாற் கட்டிய பெரிய முதற் கோயிலென்பர் ஆராய்ச்சியினர். இக்கோயில் இருப்பது நைமிசாரண்ய முனிபுங்கவர்கள் தவங்கிடந்த தபோவனம் எனவும் கூறுவர்.



(இரண்டாங் கோபுர தோற்றம்)

கோவிலின் முதல் தோற்றம்.

தெற்கு வடக்காகவுள்ள ரோடினின்றும் மேற்புறந் திரும்ப வில்போன்று வளைவாகவுள்ள முதல் வாயிலின் இருபுறமும் கணபதியும், கந்தனும் காக்ஷி தருவர். மேற்புறத்து உள்ள மூர்த்திகளின் உருவங்களும் மனதைக் கவர்ந்துகொள்ளும் இவ்வாயிலிற் புகுந்துபோக சற்றே அண்மையில் சிற்ப வேலைகளால் அழகியதாக அகன்றும் உயரமில்லாதது போன்று 90 அடி உயரமாகவும் தோன்றும் கோபுரமெனும் கேரளாந்தகன் திருவாசல் மேற்புறத்தின் உட்பாகம் மூன்றடுக்குகளாக இணைந்திருக்கிறது. இதற்கும் அடுத்து மற்

ரூர் கோபுரமெனும் ராசராசன் திருவாசல் அழகு மிகுந்தும் முன்னையதினும் சிறிதே அளவில் குறைந்தும் பதுமைகளால் தாங்கப்பெற்றது போன்றும் அடி முதல் சிற்பங்கள் நிறைந்தும் இருக்கிறது. இங்கு காப்பும் கதவுகளும் உண்டு. உட்புறம் 250 அடிகள் அகலமும் 500 அடிகள் நீளமும் கொண்டு கருங்கல்லானும் செங்கல்லானும் பாவப்பெற்ற பிரகாரமானது ஒரே வெட்டவெளி போன்று தோன்றும். திருச்சுற்று



(அம்மன் சன்னிதியினின்று முன் தோற்றம்)


மாளிகையின் கீழ்த்தென் பாரிசத்து யாகசாலை, பாகசாலை, பண்டகசாலை போசன சாலையும். மேல்வட பாரிசத்து பரிவாராலயத்துப் பிள்ளையார், இலிங்க வடிவில் நவக்கிரகங்கள், நூற்றெட்டு சிவலிங்கங்களும் அடுத்து வரிசையாகவே இலிங்கப் பிரதிஷ்டையும், ஆங்காங்கு முறையே எண்திக்குவரின் உருவங்களும், சுவரகத்து அறுபத்து நான்கு திருவிளையாடல்

கள் வண்ணமுறச் சித்தரித்திருக்கும் பான்மையும் காணக் கனிவுதரும். பரிவாராலயத்துப் பிள்ளையாரே கோயிற்கட்டு முன் முதன் மூர்த்தியாய் இடம் பெற்றாரென்பர். இம் மூர்த்தி மன்னன், மகிழிகள் முதல் சேனைத்தலைவர் போர் வீரர் ஈறாக யாவரானும் தானங்கள் பல பெற்றதை அவரின் அண்மையிலுள்ள கல்வெட்டுகளால் அறியக் கிடக்கின்றது.

பெருவுடையார் கோவில்.

இக்கோயிலின் வாயில் தென்புரம் வடபுரங்களில் பழங் காலப் படிக்கட்டுகளானும், எதிரே மராட்டிய மன்னரால் 1803-ல் அமைக்கப் பெற்ற புதிய படிக்கட்டுகளானும் சிறப் புறவமைந்து, இருமருங்கும் கணபதி, துர்க்கை இவர்களும் முன்புரம் பைரவர், சனிச்சுரரும், வாயிற்பாங்கில் ஒற்றைக் கல்லால் 18 அடி உயரமும் 8 அடி குறுக்களவும் உள்ள துவாரபாலகர்கள் காப்புச் செய்கின்றனர், உள்ளே நுழை யும்போது வாத்திய மண்டபம், நர்த்தன மண்டபம், தியாக ராஜா கோவிலடங்கிய ஸ்தாபன மண்டமம், மகாமண்டபம், பக்கவாயில். அர்த்த மண்டபம் (இது ஓர் உட்பிரகாரத் துடன் கூடியது) கருப்பக் கிரகம் இவைகள் முறையே அமைந்து உள்ளே பருத்துத் திரண்டுருண்டு மலைபோன்று எழுந்து பிரகாசமாய் விளங்கும் இலிங்காகார அருள்வடிவினை காணக் கண்கள் ஆயிரமாயிரம் பெற்றிருப்பினும் போதாவே, திருநுதற் பொட்டழகு ஓர் அழகுதான். வெண்டுகிலின் தூய்மை ஓர் தூய்மைதான். உலகில் இது ஒன்றுதான். ஒப்பற்றதுதான். செப்புதற்கெளிதற்றதுதான். இதனைக் கருவூர்ச் சித்தர்பெருமான் “உலகெலாந் தொழவந்த எழு கதிர்ப்பரிதி ஒன்று நூறாயிரகோடி அலகெலாம் பொதிந்த திருவுடம்பு அச்சோ “என்றும் “நெற்றியிற் கண் என் கண் ணினின்றகலா” என்றும், “என்னெடுங் கோயில் நெஞ்சு வீற்றிருந்த எளிமையை என்றும் யான் மறக்கேன்” எனவும் தம் திருவிசைப்பாவில் பாடிக் கனிந்துள்ளார். ஆவுடையார்

54 அடி சுற்றளவும் 6 அடி உயரமும், பாணம் 23½ அடி உயரமும் உள்ளது. "ஒரு லிங்கமும் தஞ்சைப் பிரகதீச்வர லிங்கத்துக்கு ஒப்பில்லையே" எனப் பாடிய புலவரின் புகழும் போற்றற் குறித்தே. கோவில் கட்டி முடிந்ததும் சிவலிங்கத்தினை எழுந்தருளச் செய்து ஆதி சைவர்களைக்கொண்டு மருந்து சாத்திப் பந்தனஞ் செய்வித்தபோது, மருந்திளகிப் பந்தனமாகாமற் போகவே மன்னர் மனம் வெதும்பி நின்றான். அதுகாலை, "கருவூர்த் தேவர் ஈண்டுவரின் நீ கருதிய கருமம் கை



(விநாயகர் கோவிலுடன் தென்கிழக்குத் தோற்றம்)


கூடுமென்றோர் அசரிரி வாக்குப் பிறந்தது. மன்னனும் மனந்தேறி "அப்பெரியாரைக் காண்பதெப்படி" எனப் பலரையும் வினவியபோது, மாற்றுருவங்கொண்டு அங்கிருந்த போகநாதரெனும் யோகியார், "வேந்தே! கவலற்க, கருவூர்த் தேவரை ஈண்டு யாம் வரவழைப்போம்" என்று உறுதி கூறி,

காக்கைக் காலில் சீட்டெழுதிக் கட்டி பொதிகைக் கனுப்ப, போகநாதரின் ஆணைக்கியைந்து கருவூர்த்தேவர் தஞ்சையை அணுகி திருக்கோவில்புக்கித் தன் தவ வன்மையால் சிவலிங்கத்தை ஆவுடையாருடன் செவ்வனே நிறுத்தித் தம் வாய்த் தம்பலத்தை மருந்தாக உபயோகித்து இறுகப் பிடித்திடச் சிவலிங்கம் தம்பனமாயிற்று. (இது கருவூர்ப் புராணம் தரும்) அக்காலே இலிங்கத்திற்கு இராஜராஜேஸ்வரமுடையார் என்பது வழங்கலாயிற்று. எனினும் ஆடவல்லான், தக்ஷிண மேருவிடங்கன் என்னும் திருநாமங்களும் பிற்றைஞான்று பெருவுடையாரென்றும், அம்மைக்கு உலகமுழுதுடையாள் என்றும் வழங்கலுறுகின்றது. கருவூர்ச் சித்தர் இலிங்கத்திற்கு மருந்து சாத்தி ஏனையவற்றை ஆதி சைவர்களைக் கொண்டே செய்யுமாறும், கும்பாபிடேகத்திற்கு தேவர்களும் வருவதால் அவர்களுக்கு விடுதிக்கு இடங்களையும் ஆக்ஞாபித்தனராம். அப்போது ஈஸ்வரமூர்த்தி காடே தேவர் விடுதியாயிற்றென்றும் கூறுவர் சிவலிங்கத்தை இராஜராஜன் நர்மதை நதிதீரத்திலிருந்து கொண்டுவந்ததாகவும், இதற்காதாரமாக இற்றைச்கும் சைத்ரத் திருவிழாவில் அஷ்டகோடியன்று தஞ்சை அறுபத்து நான்குமனை வேளாண் செட்டிமார் பிரதிநிதியை அழைப்பித்துச் சிறப்பிக்கும் ஐதிகம் எனச் சுட்டுவதும் பொருந்தும். நமது சாத்திரங்கள் ஈச்வரனுக்கு சூரிய சந்திரர்களை இரு நேத்திரங்களாகவும், இலக்குமி சரஸ்வதியை வீணைக்குரியோராகவும் கூறுமஃதே போன்று, இங்கும் மகா மண்டபத்தின் இருபக்க வாயிற் படிக்கு உட்புறங்களில் சூரிய சந்திரர்களும், வெளிப்பக்கங்களில் இலக்குமி சரஸ்வதியும் தரிசனக் காக்ஷி தர இருக்கின்றனர். இக்கோயிலில் ஏனைய இலிங்கங்கள் 252 ஆகும்

கோபுரம்.

பார்வதி சமேதராய் பரமசிவன் விற்றிருக்கும் கைலாயத்திற்கு உத்திரமேரு என்றும், அதைப்போன்று இவ்

விமானத்தின் கீழ்ப்பாரிசத்து மண்டபத்தின் மேற்புரம் காணப்பெறும் காக்ஷியைப் பொறுத்து இதை தக்ஷிணமேரு என்றும் கூறுவர். இது நாற்கோண வடிவந்தாங்கி பதி னுன்கு கோபுரம் மாடிகளுடன் 216 அடிகள் உயர்ந்து நாற் புறமும் காக்ஷி யளித்தவண்ணமிருக்கிறது. சுவரகத் தூண் கள், வண்ணமாடங்கள், தெய்வப் படிமங்கள் முதலியன அழகாய்ச் செதுக்கப்பெற்று காண்போர் மனத்தையும் கண்




(வடக்குப் பிரகார கோபுரத் தோற்றம்.)

களையும்பற்றி ஈர்க்க வல்லுனதாயுளது. அடித்தளம் 96 அடி சதுரமா யமைந்துள்ளது. கோபுரத்தின் உச்சியும், கல சத்தின் அடிப்பாகமுள்ள உருண்டை வடிவமாயுள்ள கல் தூபிக்குக் கீழ்புரமாகிய பிரம்மரந்திர தளத்தில் போடப் பெற்ற ஒரே கல்லானது 80 டன் நிறைகொண்டு, தஞ்சைக்கு சற்று வடக்கில் கும்பகோணம் ரஸ்தாவில் நான்கு மைல்

தூரத்திலுள்ள வயலூரினின்றும் சாரம்போட்டு சிகரமேற்றியதென்பர். பிரம்மரந்திரக் கல்லின் மேல் எண்கோண வடிவத்துடன் எழில் பெற்றிலங்கும் ஸ்தூபியின் மேலுள்ள (கலசம்) குடம் 12½ அடி உயரமுள்ளது. 3083 பல செம்பின் நிறைகொண்டு மேற்புரம் 2926½ கழஞ்சு பொற்றகடு போர்த்ததாகும். இக்குடம் வீரபத்ர ஆச்சாரியால் கொடுக்கப்பட்ட பஞ்ச லோகக் கம்பத்தில் இறுத்தப் பெற்றதெனவும், குடம் சோழ சிங்காசனாதிபதியால் கொடுக்கப்பட்டதெனவும் தேவநாகரி பாஷையிலும் சமஸ்கிருதத்திலும் அக்குடத்திலேயே பொறிக்கப் பெற்றிருக்கிறது. பிரம்மரந்திரக் கல்லின் மூலைகளில் சோடி சோடியாக வைக்கப்பெற்றிருக்கும் நந்திகள், அம்மன் கோவிலுக்கெதிரில் திருச்சுற்று மாளிகையில் வடமுகமாயுள்ள நந்தியினும் சற்றே சிறுத்திருக்கும் அத்துணைப் பெரியதாகும். பிரம்மரந்திரக் கல் அழகியெனும் ஓர் கிழவியால் கொடுக்கப்பட்டதென்றும் அதற்குப் பிரதி பலனாக இப்போது பனகால் (தஞ்சாவூர் டிஸ்டிரிக்ட் போர்டு) கட்டிடத்திற் கருகாமையிலுள்ள அழகி குளம், அழகி தோட்டம் இவைகளை மன்னனால் பெற்றாளெனவும் தெரிவதோடு தாராசுரத்திலுள்ள ஸ்ரீ ஐராவதேஸ்வரர் ஆலயமும் இவ்வம்மையின் வேண்டுகோளுக்கிணங்கி மன்னனால் கட்டப்பெற்றதெனவும் சிறப்புடைய நூற்கள் பலவும் கூறுகின்றன. இத்தஞ்சைப் பெரிய கோவிலின்கோபுரத்தின் தென்பாரிசகிழ்புரத்தில் பிள்ளையார், மகாவிஷ்ணு, பிக்ஷாடனர், சூலதேவர், தக்ஷணாமூர்த்தி, மார்க்கண்டேயர். நடராஜர், விக்கிரகங்களும், மேற்பாரிச கிழ்புரத்தில் லிங்கோத்பவர், அர்த்தநாரீசுவரர் விக்ரகங்களும், வடபாரிச கிழ்புரத்தில் கங்காதரர், கல்யாணசுந்தரர், மஹிஷாஸுரமர்தினி விக்கிரகங்களும், அப்பக்கத்திலுள்ள கோமுகத்தின் மேற்புரம் அடுக்கடுக்காயுள்ள மூன்று தளங்களிலும் மேற்புரம் நோக்க மூன்றாவது விக்ரகத்தின் சிரசிற்கு மேலுள்ள வட்டமான பிரபாவளியின் மத்தியில் தொப்பியணிந்த ஓர் ஐரோப்பியரின் சிரசும் உள்ளது. காஞ்சிபுரத்தினின்றும் வந்த பக்தியிற் சிறந்த

சிற்பி, தீர்க்கதரிசி போன்று வரும் பொருளுறைப்பான் வேண்டி சோழ, நாயக்க, மகாராட்டிர, ஆங்கிலேய மன்னர்கள் முறையே அரசு புரிவர் என்பதை அறியச் செய்தான் என்பர் ஒரு சாரார்.

17-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்த நாயக்க மன்னனது தோழர் டென்மார்க்கு தேசத்து ரோலண்டு கிரேப் என்பர் ஒரு சாரார். மார்க்கோ போலோ என்பர் மற்றொரு சாரார். ஆனால் சோழர் காலத்திருந்தே பிறநாட்டு வியாபாரத் தொடர்பிருந்தமையால் யாரோ ஓர் ஐரோப்பிய வியாபாரியின் உருவமே சிற்பிக்கப்பட்டதெனல் துணிந்து கூறுவதற்குப் பொருத்தமாகும்.



(வடமேற்குப் பிரகாரம்—சுப்பிரமணியர்கோவில்.)

முருகன் ஆலயம்.

இக்கோவில் மேற்குப் பிராகாரத்தின் வடகோடியில் 45 அடி சதுரமுள்ள அடித்தளமும், 55அடி உயரமுள்ள கோபுரமும் அமையப்பெற்றது. சிற்ப நுட்பங்கள மிகமிகச்

சிறந்து விளங்குவது. நாவலரின் எழுத்து வன்மைக்கும் பாவலரின் புகழ்வன்மைக்கும் அப்பாற்பட்டது. சுவரகத் தூண்கள் பார்ப்போர் மனதைப் பற்றி ஈர்க்க வல்லது. தென் இந்தியாவில் அன்றி இந்தியாவில் ஏன் உலகிலேயே இம்மாதிரியான வேலைப்பாடமைந்த கோயில்கள் இல்லை யென்று துணிந்து கூறற் பொருந்தும். அழகில் தனக் குவமை தாமே என்றியம்புமாதிரி சிற்றுளிகொண்டு அத் தூணைச் சிறப்புடன் செய்த சிற்பியின் கைத்திறனைப் புகழ கோயிலின் பின்புறமுள்ள ஊசி நுழையும் துவாரங்களே ஓர் எடுத்துக்காட்டாகும். இங்குள்ள முருகனின் அறுமுக வுருவம் மயில், திருவாச்சி யாவும் ஒரே சிலையில் செதுக்கப் பெற்றது. ஒவ்வொரு அணுவும் தனித்தனி வருணனைக்கு இலக்காய் இருக்கின்றது. முருகன் வரப்பிரஸாதியாய் அவ தரித்த அருணகிரிநாதரும் தான் இங்கு பாடிய மூன்று திருப் புகழ்களிலும் ப்ரம்மா, விஷ்ணு இருக்கின்ற இடங்களிலும் உயர்வானதென்றும், தன்னை வந்து அபயம் என்போரை அஞ்சேல் என்று காப்பதற்கு கருணையுடன் எழுந்தருளி யிருப்பதாகப் புகழ்ந்திருக்கும் பாக்களை மற்றோரிடம் காண்க. வாயிற்படியிலுள்ள துவாரபாலகர் இருவரும் எழில்பெற் றிலங்குவதைக் காண இறும்பூது தரும்.


பெரியநாயகி அம்மன்.

இக்கோவில் ஆலயத்தின் வடபாலுள்ள சிவகெங்கைத் தோட்டத்தில் இருந்ததெனவும், பிறகு ஓர் நாயக்க மன்ன னால் இடிக்கப்பெற்றும், மற்றோர் நாயக்க மன்னனால் கட்டப் பட்டும் ஆயது என்பது அறியப்படுகின்றது. இவ்வுமா பரமேச்வரி மிக்க இலாவண்ணியத்துடன் உருவிற் பெரிய தாய் தென்முகம் நோக்கி அருள் சுரக்கும் திருக் கோலத் துடன் விளங்குகின்றாள். இங்கு கோயில் நிர்வாக சபை உண்டு. இக்கோயிலுக்கு சோழர் காலத்திலும் நாயக்கர் காலத்திலும் இரண்டாம் சரபோஜி காலத்திலும் கும்பாபி

4

2495

டேகம் நடந்திருக்கிறது. ஆனுல் 7—2—'51ல் இக்கோயில் கலசம் திருட்டுப் போய்விட்டபடியால் 11—3—'51ல் வெற்றிவேல் அச்சுக்கூடம், வெற்றிவேல் பேக்கரி, வெற்றி




(வடகிழக்கு பிரகாரம்—அம்மன் கோவில் தோற்றம்)

வேல் டைப் பவுண்ரியார்களால் புதிய கலசம் செய்து கும்பா பிடேகம் செய்யப்பட்டதுடன், அங்கு. தெக்ஷிணமூர்த்தி கோயிலின் கலசமும் பல வருடங்களாய் இல்லாதிருந்ததால் அதற்கும் கும்பாபிடேகம் செய்யப்பட்டது.

நந்தியெம்பெருமான்.

இறைவன் சந்நிதிக்கெதிரே உயர்ந்த மேடை மண்டபத்தில் 25 டன் நிறையும், 12 அடி உயரமும், 19½ அடி நீளமும், 8¼ அடி அகலமும் பூண்டு, ஒரே கல்லினுல் செய்யப்பெற்று, அருளோடு விளங்குகின்றது, இது திரிசிராப்பள்ளியைச் சார்ந்த பெரம்பலூர் தாலூகாவிலுள்ள பச்சை மலையினின்றும் கொண்டுவரப்பட்ட ஒரே கல்லில் செய்தது.

இந்நந்தி மண்டபத் தூண்களில் நாயக்க மன்னர்களின் உருவங்கள் இருப்பதால் மண்டபம் மட்டும் நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டதென ஊகிக்க இடமுண்டு. இந் நந்தி



(நந்தியெம்பெருமான் தோற்றம்)

நாளடைவில் வளர்ந்து கொண்டிருந்த தெனவும் முதுகில் இருப்பாணி செருகப் பெற்று நிலைபெற்ற தென்றும், இதற்குள் மண்டுகம் (தேரை) இருந்ததெனவும், பிறகு அத் தேரையை எடுப்பித்து, நடராஜர் கோவிலுக்கு மேற்புறமுள்ள குளத்தில் (இப்போது கிணறு) விடப்பட்ட தென்றும் சொல்லுவது கர்ண பரம்பரையாக வழங்குவதைத் தவிர எவ்வித ஆதாரமுமில்லை.


மஹா கணபதி.

ஆலயத்தின் தென்மேற் பிராகார மூலையில் 1803 ஆண்டு இரண்டாம் சரபோசி மன்னனால் கட்டப்பட்டதென்றும், பழைய கணபதியை எடுத்து விட்டு புதியதொன்றை அங்கு ஸ்தாபித்தாரெனவும் பிறவும் அம் மன்

னன் கல்வெட்டுகளில் காணலாம். இக் கணபதி இங்குள்ள ஆறுமுக வள்ள லுருவினும் வனப்பு வாய்ந்தது என்பது மிக மிகப் பொருந்தும். ஆனால் இக் கணபதி கோயில் கட்டு முன் பரிவாராலயத்துப் பிள்ளையாரே முதற் கடவுளாயிருந் தவர் என்பது உண்மை.

ஆடவல்லான்—நடராஜர்


இக் கோயில், கோயிற் பிரகாரங்களின் வடகிழக்கு மூலையிலுள்ளது. மறைகள் கூறும் அளவில் அமைந்தது. பஞ்ச லோகத் திருமேனி மக்களின் மனக்கண் மாசு நீக்குவது போன்றொளிரும். இராசராசன் இம் மூர்த்தியிடம் வைத்த பேரன்பிற்கறிகுறியாக கஞ்சி அளக்கும் கலய முதல் பலவற் றிற்கும் ஆடவல்லான் என்ற நாமத்தையே சூட்டியுள்ளான் இம்மூர்த்தி மார்கழித் திருவாதிரையில் சேவிக்க இனிமை தரும்.



(மேற்புர பிரகாரத்தில் கருவூரார் ஆலயம்.)

கருவூரார்.

இக் கோயில் மேலைப் பிராகாரத்தின் மத்தியில் இருக்கிறது. இச் சித்தர் பெருமானின் இருக்கையும் அருட் பொலிவும் காணக் காணத் திகட்டா வண்ணமுள்ளது. இன்னூரே பொன்னம்பலத்துப் பொலிவுறும் நடேசரைச் செய்து வைத்தாரென போகர் நூல் கூறுநிற்கும். இவரை ஓர் பொற்கொல்லரென்றும், பிராம்மணரென்றும் கூறுவர் ஆனால், மூல லிங்கத்தைப் பிரதிட்டை செய்து, இப்போது தனக்கென இருக்கும் கோவில் மேடை மீது தவஞ் செய்து




(வடமேற்குப் பிராகாரத்தில் கோவிலில் உள்ள ஆறுமுகக் கடவுள்.)
(ஓர் படத்தினின்று எடுக்கப்பட்டது)

கொண்டிருந்தாரெனவும் கூறுவர். இன்னூர் முதலாம் ராசராசன் காலத்தும் முதலாம் ராசேந்திரன் காலத்தும் இருந்து தஞ்சை, கெங்கை கொண்ட சோழபுரம் முதலிய பலவிடங்களில் திருவிசைப்பா பாடியுள்ளார். இக்கருவூரார் கோவில் கட்டுமுன் மேடை யொன்றே இருந்ததாகவும், சுமார் நாற்

பான் ஆண்டுகட்கு முன்னர் தஞ்சையிலிருந்த ஓர் ஓய்வு பெற்ற போலிஸ் யாதவ நரைமூதையரால் இக் கருவூரார் கோவில் கட்டப் பெற்ற தென்பதும், 1926ல் மீண்டும் அக் கோவிலைச் சிறிது பெரிதாக்கி கருவூரார் செப்புத் திருமேனி செய்வித்து கும்பாபிடேகஞ் செய்ததும் பலருமறிவர். மூற்றுந் துறந்த பற்றற்ற இன்னாரின் திருவிசைப்பா நாவுக்கும் மனதிற்கும் இனிமை தரும்.

தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படும் கல்வெட்டுகளில் முக்கியமானதும், கோவில் சம்பந்தமுடையதும்.



இவ் வெழுத்துக்களைக் கற்றுக்கொண்டால் தஞ்சைப் பெரியகோவிலிலுள்ள கல்வெட்டுகளைப் படித்தலியலும்.

தேங்காய்:—இது நிபந்தக் கணக்கில் இல்லாததானும் கோவில் வட சுவற்றில் 'தெங்கு மரம் நின்ற நந்தவனமும்' எனக் குறிப்பிட்டிருப்பதால், தெங்கு இருந்தும் அக்காலத்தில் தேங்காயுடைத்து வழிபடும் முறை இல்லை எனக்கூறற் பொருந்தும்.

சாம்பிராணி:—இதற்குப் பதில் குங்கிலியமே உபயோ கித்திருக்கின்றனர்.

திருமஞ்சனம், திருவிளக்கு:— தினமும் திருமஞ்சன நீரில் பெருஞ் சண்பக மொட்டு, ஏலவரிசி, இலாமச்சி வேர் பன்னீர் புஷ்பம் இவைகள் ஊறவைத்தவை. நாடோறும் விளக்கு ஒன்றுக்கு உழக்கு விழுக்காடு நெய் அளப்பதற்கு ஆடு, பசு, எருமை இவைகள் ஆடு எனில் 90-ம், பசுவெனில் 48ம், எருமை எனில் 16 வீதமும் இடையர்கள் பெறுவர்.

திருவமுது:— பழவரிசியாற் சமைத்த போனகம், நெய்யமுது, கறியமுது, பருப்பமுது, தயிரமுது, அடைக்கா யமுது, வெள்ளிலையமுது.

திருவிழாத் திருவமுது:— பழவரிசியால் அட்ட போனகமும், பருப்பு, பழவரிசி, மிளகு, சீரகம், சர்க்கரை, கடுகு, நெய் இவைகளாற் செய்து அப்பக்காய் கறியமுதும், மிளகு, சீரகம், சர்க்கரை, கொள்ளு, வாழைப்பழம், புளி தயிர், நெய், கடுகு இவைகளாற் செய்த அட்ட புளிக்கறி யமுதும் புளியிட்டடுங்கறி யமுதும், காய்க்கறி யமுதும், பொறிக்கறி யமுதும் பிறவும்

திருவிழா:— திங்கள் தோறும் ராசராசன் பிறந்த நாளாகிய சதயம், கன்னிரண்டும், கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளும் ஆண்டு வைகாசி திங்களில் பெரிய திரு விழா ஒன்பது நாளும் அதுபோது இராசராசேச்வர நாடக மும்.

கோயில் காரியம் பார்ப்பவர்:—ஸ்ரீ காரியம் என் றும், ஸ்ரீ காரியக் கண்காணி நாயகம் என்றும், திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்ய இசைத் தமிழ் வல்லார் நாற்பத்தெண்ம ரும், உடுக்கை வாசிப்பான் ஒருவன், கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒருவன், கானபாடி, ஆரியம் பாடுவார், தமிழிசை

பாடுவார், பணிப் பெண்கள் பதியிலார் நானூறுவர், பக்கவாத்தியர், வீணை வாசிப்பவர்களும், மொரலியம், வங்கியம், பாடலியம், உடுக்கை, முத்திரைச் சங்கங்களும், உவச்சுப்பறை, சகடை, காடிகை எனும் பறை விசேடங்களும் இருந்தன.

நகைகள்:—கண்ட நாண், புல்லிகைக் கண்ட நாண், பாசமாலை, மாணிக்கத்தின் தாலி, வாகு வலயம், பதக்கம், அரதன வளையல், அரதனக் கடகம், பவழக் கடகம், திருக்கைக் காறை, திருப்பட்டிகை, அரதன மோதிரம், நவரத்தின மோதிரம், மாணிக்கத்தின் உழுத்து, வயிர உழுத்து, சோனகச் சிடுக்கின் கூடு, பிருஷ்ட கண்டிகை, ஸ்ரீ சந்தம் என்ற மணி பதித்த அணிகலங்களும், திருமுடி, வீர பட்டம், உதரபந்தனம், இராசாவர்த்தம், வயிர சாயலம், மூன்றுக அடுத்து விளக்கின கண்டத்துடர் புறத்துடர், ஏகாவல்லி, திரிசரம், பஞ்சசரி, சப்தசரி நிரன்மணிவடம், பொன்னுணிற் கோத்த மாணிக்கத்தின் திரு, பொன்னின் பட்டக்காறை, திருக்களாவம், திருமகரம், திருக் குதம்பை, தோடு, வடுகவாளி, கொட்பு, பட்டைமேற் குண்டு வைத்து விளக்கின வளையல், கைக் கடகம், திருக்கால்வடம், திருவடிக் காறை, திருக்கால் மோதிரம், என்றின்னோரன்ன பொன்னணிகளும், முத்தின சூடகம், முத்தின் சிடுக்கு, முத்து மாத்திரை என்னும் முத்தணிகலங்களும்.

தஞ்சாவூர்.

இவ்வூருக்கு வரும் யாத்ரிகர்களும் பிரயாணிகளும் பார்க்கவேண்டிய பலவற்றுள்ளும் முக்கியமாக ஒன்று: முதலாம் இராசராசன் எடுப்பித்த தக்ஷிணமேரு என்னும் பெரிய கோவில் கோபுரம். மற்றையது: அரண்மனையிலுள்ள பெரியகோவில் கோபுரம் போன்ற ஒன்றும் அரண்மனையிலுள்ள நுணுக்கங்களும்.

தஞ்சை, சோழ. நாயக்க, மகாராட்டிர மன்னர்களால் ஆக்கப்பெற்றதும் மாகாணத்திலுள்ள பெரிய நகரங்களில் எட்டாவதுமாகும். தஞ்சை என்பது தஞ்சாவூர் ஜில்லாவின் தலைநகர் இது 3654 சதுர மைலும் காவிரி குடமுருட்டி, வெட்டாறு, விண்ணாறு, வடவாறு, மேட்டூர் கால்வாய் முதலியனவற்றால் பாயப்பெற்ற வளப்பமுடையது. அக்ஷரேகை தீர்க்கரேகைப்படி பொருந்தியது சென்னைக்குத் தெற்கில் 228 மைல் தொலைவிலுள்ளது. மதம், கல்வி, கலை. ஆராய்ச்சி, சங்கீதம், இராச்சிய விவகாரம் இவைகட்குப் பிறப்பிடமென்னலும் பொருந்தும்

ஊர்ப்பெயர்.

இவ்வூரில் குபேரன் பரம ஈச்சுவரனை வழிபட்டமையால் இவ்வூருக்கு அளகை என்று பெயர். இவ்வூரில் பராசர முனிவர் தவஞ் செய்தகாலைத் தஞ்சன், தாரகன், தாண்டகன் என்னும் அசுராதிகளால் துன்புறுத்தப்பட்டபோது அம் மாமுனிவர் விண்டுவிடமும், துர்க்கையிடமும் முறையிட்டார். முனிவரின் முறையீட்டிற் கிரங்கிய விண்டு தஞ்சன், தாண்டகனையும், துர்க்கை, தாரகனையும் சம்ஹரித்தனர். அதுபோது தஞ்சன் அம்பிகையிடம் இவ்வூர் தன் பெயரால் அழைக்கப்படல் வேண்டுமென குறையிரந்ததால் அதுமுதல் அளகை நகர் தஞ்சாவூர்—தஞ்சம்புரி—தஞ்சாவூர் என வழங்கலுறுகின்றது. இவ்வூரின் வடபால் அமர்ந்திலங்கும் திரு

வுடைக் கோடியம்மனே தஞ்சை வாசிகளின் குல தெய்வ மாயிற்று. ஆழ்வாராதிகளால் மங்களாசாசனம் செய்யப் பெற்று முதன்மைத் திருக்கோயில்களாகிய நீலமேகப் பெரு மாள், மணிகுன்னப் பெருமாள், சிங்கப்பெருமாள் ஆலயங் களும் அருள் நிறைந்து இலங்குகின்றன. வடவாற்றை யொட்டிய பெருந் திருக்குளமாகிய இராசாகோரியே பராசர முனிபுங்கவரின் ஹோமகுண்டமாகும்.

சரித்திரகாலமும் அரசாட்சியும்.

புகழ்மலிந்த தஞ்சாவூர் சரித்திர ஆராய்ச்சிக் காலத்தில் முத்தரையர்கள் வசமிருந்தது. கி. பி. 9-ம் நூற்றுண்டு முதல் 11-ம் நூற்றுண்டு வரை சோழமன்னர்கள் தன்னுேப்பா ரிலாது ஆண்டு வந்தனர். ஆனுல் சோழ மன்னர்களில் முத லாம் இராசேந்திரன், தலைநகராயிருந்த தஞ்சையை விட்டு கங்கைகொண்ட சோளிச்சரம் புக்கு அவ்வூரைத் தலைநக ராக்கியதால் தஞ்சை சற்றே சோபையிழந்தது. 11-ம் நூற் ருண்டில் இங்கு யாத்திரை செய்த அல்பிருனி யெனும் அரா பிய மேதை யொருவர் "உலகில் முதன்மைபெற்ற தஞ்சைப் பாழாக் கிடக்கிறது" என எழுதியுள்ளார்.

இவ்வாருக 13ம் நூற்ருண்டின் கடைசியில் தஞ்சை பாண்டியர்களால் முக்கியத்வம் அடைந்தது. ஆயினும் மாலிக் காபர் எனும் மகமூதியரிடமிருந்து தப்பியது என் பதும் குறிப்பிடத் தக்கது.

16ம் நூற்ருண்டில் 1549 வரை விஜய நகர நாயக்கர் களால் ஆளப் பெற்றபோதும் நாடு செழிப்புடனே இலங்கி யது. 1570ல் நாகை வந்திருந்த ஸீஸர் பெட்ரிக் என்பா ரும் தஞ்சையைப் புகழ்ந்துள்ளார். அப்போது போர்ச்சு கீசியரும் குடியேறி யிருந்தனர். எனினும் கடைசி விஜய ராகவ நாயக்கர் காலமாகிய 1643 வரை ஊர் சீருடனேயே திகழ்ந்தது. அப்போது விஜயராகவ நாயக்கருக்கும் மதுரை

சொக்கநாத நாயக்கருக்கும் கொள்ளு, கொடுப்பு தகராறு பற்றி தனது மைத்துனர் அழகிரி நாயக்கரைத் தஞ்சையின் மேல் படையெடுக்கச்செய்ய அப்போரும் வடக்கு வாயிலின் கண் நிகழும்போது, விஜயராகவ நாயக்கர் தனக்கு ஆபத்து ஏற்படுமேல் தம் குலப் பெண்டிர் எண்பதின்மரும் இறந் தொழிய பல வெடி மருந்துகளை வைத்திருந்த அறையில் இருக்கச் செய்தார். அதுபோது அவரது மந்திரி வெங் கண்ணு என்பார் பிறரறியாது அரசிளங் குழந்தையை நாக பட்டினத்திற்குக் கொண்டுபோய் வளரச் செய்தார். பத்தி யிற் சிறந்த விஜயராகவ நாயக்கரும் அவரது மைந்தன் மன் னார் தாசும் போரில் இறந்தனர். இதுபோது அழகிரி நாயக் கரே தஞ்சையை ஆண்டு வந்தார். வருடங்கள் சில செல்ல வெங்கண்ணு நாகபட்டினத்தில் வளர்ந்த அரசிளங் குமரன் செங்கமலதாசை அழைத்துக்கொண்டுபோய் பிஜாப்பூர் சுல் தானிடம் முறையிட அம்மன்னவன் எகோஜி போன்ஸலே என்னும் தளபதியைத் தஞ்சைக்கு அனுப்பினர். அழகிரி வெருண்டோட செங்கமலதாசை சிம்மாசனத் திருத்தி எக் கோஜி கும்பகோணத்தை இருக்கையாகக் கொண்டார். செங்கமல தாஸ் வெங்கண்ணுவைப் பொருட் படுத்தாது இருக்க, வெங்கண்ணு எக்கோஜியிடம் சென்று நீரே தஞ் சைக் கரசாகலாம் என்று வேண்ட, எக்கோஜியும் இசைந்து 1766ல் தஞ்சையை மகாராஷ்டிர ஆளுகையின் ஆரம்ப மாக்கினர்.

எக்கோஜிக்கு மூன்று மைந்தர்கள். ஷஹாஜி என்பார் சாக்கோட்டையிலும், துக்கோஜி என்பார் மகாதேவபட்டி னத்திலும் வளர்ந்து வந்தார்கள். எக்கோஜிக்கு அடுத்து ஷஹாஜியும் முதலாம் சரபோஜியும் முறையே நாட்டை ஆண்டு வந்தனர்.

பிறகு துக்கோஜியின் மைந்தனை பாவா சாகேப் என் கிற எக்கோஜியும், பிறகு ஒருவருட காலம் அவரது மனைவி

ஜுஜான் பாயி சாகேபும், பிறகு பிரதாபசிம்ம மகாராஜாவும் முறையே அரசாண்டு வந்தனர். பிரதாப சிம்மர் மகா பக்திமான் கஞ்சீபுரத்தில் கர்நாடக நவாப்புகளால் அக்காலத்தில் ஏற்பட்ட கலகத்தின்போது அங்குள்ள பங்காரு காமாக்ஷியை எடுத்து வந்து உடையார்பாளையத்தில் இருந்த சங்கராச்சாரியாரை அழைத்து வந்து கும்பகோணத்தில் இடந்தந்து காமாக்ஷியை தஞ்சையில் பிரதிட்டை செய்தார். 1740-ல் தோஸ்த் அலிகான் என்னும் கர்நாடக நவாபை ஜெயித்து காளியைப் பூஜித்தார். இன்னுர் சத்திரங்கள் பல சமைத்த பெருமைகொண்டவர். நாகூர் ஹஜரத்து குத்துபுல் அக்தாபு பர்துல் அஃபாபு செய்பதினு ஷாகுல் ஹமீது காதிர் ஒலி கஞ்ச ஸவாய் கஞ்சபக்ஷ் பாத்துஷா சாஹிபு ஆண்டவர் அவர்கள் தர்காவை மிகவும் பெரிதாக்கி மனேஹராவையும் கட்டிக்கொடுத்து பதினைந்து கிராமங்களையும் மானியமாகக் கொடுத்தார் அன்று முதல் இன்றைக்கும் ஆண்டவர் ஆண்டு திருவிழாவில் தஞ்சாவூர் கொடியேற்றுவதும் ஆண்டவர் சமாதிமேல் போடும் சாதராக்களில் தஞ்சாவூர் சாதராவை முதலாவதாக சாத்தும் பழக்கமும் உண்டு.

இவர் காலத்தில்தான் வெள்ளையர்கள் தேவிக்கோட்டையை முதல் முதலாகப் பிடித்தார்கள். நவாபுகளுடனும் பிரஞ்சுக்காரர்களுடனும் அடிக்கடி சச்சரவுகள் ஆரம்பிக்கப் பட்டது. இவர்களில் வெள்ளையர்கள் சிறிது பலம் பொருந்தியவர்களானபடியால் அவர்களுடன் ராஜீய ஒப்பந்தங்களும் ஏற்பட்டன. இவருக்குப் பின் துளஜாஜியின் ஆளுகை ஏற்பட்டது. இவர் சங்கித சாராம்ருதம் எனும் நூலை இயற்றியவர். நாட்டியத்தில் விசேஷ பிரியமுடையவர். இது போது வெள்ளையர்கள் கர்நாடக நவாப் மூலமாக தாராளமாய் நாட்டில் பிரவேசித்தனர். இவர் தென்னல்குடியில் வளர்ந்துகொண்டிருந்த தன் தாயாதி வர்க்கத்தின் குழந்தையாகிய இரண்டாம் சரபோஜியை சுவீகாரமாக எடுத்துக் கொண்டார். ஆனல் இவரின் வைப்பு மகன் அமர்சிங், சர

போஜியை அரசாள விடாமல் பனிரெண்டு வருஷங்கள் தானே அரசாண்டு வந்தான். சுவார்ட்ஸ் என்பாரிடம் கல்வி கற்க ஒப்படைக்கப்பட்டிருந்த நமது இரண்டாம் சரபோஜி தன் தாயுடன் சென்னையில் வதிந்தார். சுவார்ட்ஸ் பாதிரி யாரின் அன்பினுல் இரண்டாம் சரபோஜிக்கு அரசுரிமை கிடைத்தது. இவர் சிறந்த தெய்வ பக்தி உடையவர். இவருக்கு ஆங்கிலத்தில் ஏழு பாஷைகள் தெரியும். அரசுரிமை ஏறபட்டதும் நூற்றி எட்டு கோயில்கள் தெரிசனம் செய்து, அவைகளுக்கு இவர் கொடுத்திருக்கும் செல்வங்கள் 'சரபேந் திர தீர்த்தாவளி' என்னும் நூலில் காணலாம். இவர் தன் வந்திரி மஹால் என்னும் வைத்திய நிலையத்தை ஏற்படுத்தி வைத்திய சாஸ்திரத்தை எழுதியும் மருந்துகள் செய்தும் நாட்டிற்குதவியதுடன் நாட்டிய சாஸ்திரம், சங்கீதம் இவைகளையும் பெருக்கியுள்ளார். தஞ்சைப் பிரகதீஸ்வரர் ஆலயத்தின் பிராகாரத்தில் கற்றளவரிசையும், சிலைப் பாதையும் ஏற் படுத்தினுர். திருச்சுற்று மாளிகையில் 241 இலிங்கங்களும் ஒரு அம்மை சிலையும் பிரதிட்டை செய்தார்.

நவகலாநிதி வர்ணயந்திரம் என ஓர் அச்சுக்கூடம் வைத்து கல்லில் எழுத்துக்கள் செய்து காகிதத்தில் அச்சடித்துள்ளார். அரண்மனையில் ஐந்து மாடிகளையும் கட்டிய பெருமை இவருக்குரியதே. பிரகதீஸ்வரர் கோவிலில் பற்பல திருப்பணிகளைச் செய்து பிள்ளையார் கோவிலைப் புதிதாகக் கட்டியும் முருகன் கோவிலில் கருங்கல்லுக்கு மேல் சுதை வேலை செய்தும் அம்மன் கோவிலுக்கும் சுவாமி கோவிலுக்கும் பெரிய நந்தி மண்டபத்துக்கும் அநேக கல் தளங்களும் மண்டபத்தின் பேற்புறம் கல் பாவி ஒழுங்கு செய்து அம்முறையே சபாபதி மண்டபத்தையும், தெக்ஷிணமூர்த்தி கோவிலையும், சண்டிகேசுவரர் கோவிலையும் பழுது பார்த்துக் கலசம் வைத்து 1801ல் கும்பாபிஷேகம் செய்து மகிழ்ந்திருக்கின்றுர்.

பிஷப் ஹீபரும் லார்டு வேலன்ஸியாவும் இவரை வாயாரப் புகழ்ந்ததுமன்றி பிஷப் ஹீபரால் இவரும் இவரது குடும்ப பரம்பரையும் சுகமாயிருக்கப் பிரார்த்திக்குமாறு ஒவ்வொரு சர்ச்சிலும் அப்போஸ்தோலிக் இஞ்சங்க்ஷன் ஜெபத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இவரது பிற்காலங்களில் சிவபுராணம், சிவபூஜை, யாத்திரை, சன்மார்க்க வித்தை இவைகளையன்றி வேறொன்றும் அறியார். இவருக்குப் பிறகு இவரது மைந்தன் சிவாஜி என்பார் அரசாள ஆரம்பித்தார். இவரது இராணிமார்களில் சைதாம்பா பாயி சாஹேபும் காமாக்ஷியம்பா பாயி சாஹேபும் மிகவும் சிறந்தவர்கள். இவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் தவிர வேறு ஆண் சந்ததி இல்லாததால் தனது நான்கு சகோதரிகளிலும் சிறந்தவளான ராஜாராமின் தாயும் தனது தமக்கையுமான சக்குவார் பாயி சாகேப் குமாரனாகிய ராஜாராம் என்னும் 11 வயதுள்ள சரபோஜியை சுவிகாரம் எடுத்துக் கொண்டார்.

தன் சுவிகாரக் குழந்தையை தன்னுடன் யானைமேல் பவனி செய்து கவர்னர் ஹேரிஸ் துரையிடம் காட்டி ஒப்படைத்தார். எனினும் தனது மருமகன் சக்காராம் சாஹிபின் அரசுரிமை ஆசையாலோ எப்படியோ சிவாஜி காலமானார். இவருக்குரிய பிற்கடன் சடங்குகளும் சுவிகாரக் குழந்தையாலேயே நடத்தப்பட்டது. ஆனால் சக்காராம் ரெஸிடெண்ட் போக்பஸ்ஸின் உதவியைக்கொண்டு திருச்சியிலிருந்து 25வது இன்பென்ட்ரி ரெஜிமெண்டை கொண்டுவந்து தஞ்சைக் கோட்டையை இச்சித்தார். இதனால் சுவிகார ராஜாராம் வெறுப்பு மேலிட்டு சமயபுரம் சென்று அம்மையின் அடி பணிந்து அங்கு தங்கிவிட்டார். அதுபோது மகாராணிகள் அன்னாரை அழைத்து வந்து மணம் செய்வித்து பாத்தியஸ்தராக்கினார்கள். இன்னாரின் மூத்த புதல்வரே சிவாஜிராஜ சாஹேப் என்பவர் கடைசி அரசர் சிவாஜிக்குப் பிறகு காமாக்ஷியம்பா பாயிசாஹேப், உமாம்பா பாயிசாஹேப்,

ஜிஜாம்பா பாயிசாஹேப், சிவாஜிராஜா சாஹேப் இவர்களே பரம்பரை பாத்தியஸ்தர் ஆனார்கள். சிவாஜி ராஜாசாஹேப் தனது சொந்த சொத்தாகிய சரஸ்வதி மகாலை பொது ஸ்தாபனமாக்கியதுந் தவிர மராட்டா ஸ்கூலும் ஏற்படுத்தி சிவாஜி நகர் என்னும் இடத்தையும் தன் பெயரால் கொடுத்து, துளஜாஜி மகாராஜாவினால் கட்டப்பட்ட புன்னைநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோவிலுக்கு தன் சொந்த செலவிலேயே அநேக திருப்பணிகளைச் செய்தும் 1927-ல் இவர் காலமான பிறகு இப்போதுள்ள இவரது குமாரரும், 88 கோயில்களையும் பரிபாலித்து வரும் தர்ம கர்த்தாவுமான ஸ்ரீமந்த் ராஜஸ்ரீ ராஜாராம் ராஜாசாகேப் அவர்களே வாரிசு கிரமமான பாத்தியதைகளுடன் குழந்தைகளுடனும் தம்பிமார்களுடனும் இப்போது வாழ்ந்து வருகிறார்.

நகராண்மையும் இருப்புத்தொடரும்.

1866-ல் 66,852 மக்கள் கணக்கின்படி முனிசிபாலிடி ஏற்பட்டது. ஆனாலும் 1861-லேயே தஞ்சை ஓர் சந்திப்பு நிலையமாக தஞ்சை—நாகை இருப்புத்தொடர் ஏற்பட்டிருந்தது.

சத்திரங்கள்.

இங்கு சத்திரங்கள் பலவுள அவற்றில் சிறப்பாக முனிசிபல் டாக் பங்களா, ரயில்வே ரிடயரிங் ரூம், மூன்றுவித வகுப்புள்ள இராசா சத்திரம், ஆர்ய வைஸ்யாள் சத்திரம், தென்கொண்டார் சத்திரம், சிரேயஸி சத்திரம், விண்ணார் சத்திரம் முதலியன உண்டு. இதில் சிரேயஸி சத்திரம் 1837-ல் இரண்டாம் சிவாஜி மன்னனால் கட்டப்பெற்றது. விண்ணார் சத்திரம் 1749-ல் பிரதாபசிம்ஹ மன்னனால் கட்டப்பெற்றது.

நகரமைப்பும் சிவகெங்கைத் தோட்டமும்.

இந்நகர் சம சீதோஷ்ண நிலையுடையது. நகரின் தென் வடல் 4½ மைல் நீளமும், கிழ மேல் 3 மைல் அகலமுமுடையது. கோட்டை விஜயராகவ நாயக்கரால் மூன்று மைல்

நீளமும், 15 அடி ஆழமும் கூடிய, முதலைகள் வாழும் அகழி செய்து, அவ்வகழிக்குள் 530 ஏக்கர் நிலப் பரப்பினைக் காக்க பதினைந்து அடி உயரமுள்ள அரணமைப்பு செய்யப்பட்டது. இக் கோட்டையின் தென்மேற்கு பாகத்தில் 36 ஏக்கர் நிலப் பரப்பில் சேவப்ப நாயக்கரால் சிவகெங்கை கோட்டை அமைக்கப்பெற்றது. இக் கோட்டைக்குள் உலோகநாதர் ஆலயமும் *சிவகெங்கை தீர்த்தமும், ஸ்வார்ட்ஸ் கிறிஸ்துவக் கோவிலும், இன்று பப்ளிக் பார்க் முதலியனவும் உண்டு. இப்போது பிரகதீஸ்வரர் ஆலயத்துள்ள பிரஹந்நாயகி சந்நிதியும் அப்போது சிவகெங்கைக் கோட்டைக்குள் (திருவையாறு திரு ஐயாரப்பர் கோயில் போன்று) இருந்ததாகவும், ஒரு நாயக்க மன்னரால் இடிக்கப்பெற்று பிறிதொரு நாயக்க மன்னரால் இப்போதுள்ள இடத்தில் கட்டப்பெற்றதெனவும் உரைசால் பெரியார் கூறுகின்றனர்.

---

* சிவகெங்கைத் தீர்த்தக் கர்ண பரம்பரைக் கதை ஒன்று உண்டு. முன்னைக் காலத்தொரு சோழ மன்னர் சாப வியாதியால் இரவைப் போது கிருமியால் மொய்க்கப்பெற்று கிருமிச் சோழன் என்னும் புனைப் பெயரும் பெற்றிருந்தானும். அம் மன்னன் காடு புக்கு வேட்டையாடி வரும் வழியில் களைப்புற்று அங்கு சேறும் நீருமாய்க் கிடந்த தண்ணீரைத் தனது களை வேட்கை நீக்க சிறிதெடுத்து முகந்தடவினனும். அற்றை இரவு மன்னன் முகத்தில் கிருமி இல்லாமலும், மாசற்றும் விளங்கிற்றும். அதுகண்டு மன்னன் மகிஷி மன்னரை உசுப்பி நேற்றைக் காலை முதல் இக்கணம் வரை நடந்தனவற்றை மறதியின்றி உரைக்குமாறு வினவினளாம். மன்னன் உரைப்பக் கேட்ட மகிஷி அக் கணமே மன்னனுடன் நீருஞ் சேறுமான இடத்தை அணுகி எஞ்சியிருந்த நீற்றால் மன்னனைப் பூசச்செய்ய அன்று முதல் அச் சாபவியாதியான கிருமி நீங்கிற்றும். ஆனல் இது ஒரு புனிதமான இடமென்று அங்கொரு குளம் வெட்டி அதைப் புனிதத் தீர்த்தமாக்கினர்களாம். பிற்றை வந்த நாயக்க மன்னர் இது அறிந்து இக் குளத்துக்கு தண்ணீர் வர ஓர் வாய்க்கால் தன் பெயரால் வெட்டி வடிகட்டு கலுங்கும் செய்யப்பெற்ற பின்னை விஷயம் கண்கூடு.

ராஜகோபால் பீரங்கி.

பெரிய கோட்டையின் கீழ வாயிலின் சமீபம் தாச மேடும் அதில் ராஜகோபால் பீரங்கியும் இருக்கிறது. இது அடில்ஷாவுக்குச் சொந்தம். பிஜபூர் கோல்கொண்டா சுல்தானிடமிருந்து 17வது நூற்றுண்டில் கொண்டுவந்த உருக்காகும். இப் பீரங்கி உச்சம்போது முழங்கும். விஜய மோகன் முக்தாம்பா பாயி அன்னேராஜா சாஹேப், காமாக்ஷியம்பா பாயி சாஹேப் இவர்களது காலமான 1893 வரையிலுமே இப் பிரங்கிக்கு வேலையிருந்தது. இதன் நீளம் 25 அடியும் சுற்றளவு 11 அடியும் உள்ளளவு 2 அடியுமுள்ளது.

இப்போது சிவகெங்கைக்கோட்டையும் இராஜகோபால் பீரங்கியும் புதை பொருள் ஆராய்ச்சி இலாகாவினரால் காக்கப் பெற்றுவரினும் சமீபத்தில் நடந்த உலக யுத்தத்தின் போது அந்த பீரங்கியை உடைத்து இரும்பை உபயோகிக்க துரைத்தனத்தாரால் எடுத்த முயற்சியின்போது நமது சீனியர் பிரின்ஸ் ராஜஸ்ரீ ராஜாராம் ராஜா சாஹேப் அவர்களின் பெரு முயற்சியால் காப்பாற்றப் பட்டதென்பதை நாம் மறப்பதற்கில்லை.

அரண்மனை.

தஞ்சைக் கோட்டை கீழ ராஜவீதியில் வாயில்கொண்டு விண்ணகத் தளாவுவது போன்றிலங்கும் அரண்மனை, நாயக்க மன்னர்களானும், மாராட்டிர மன்னர்களானும் கட்டப் பெற்றது இவர்கள் தேவைக்குத் தக்கவாறு ஐந்து மாடிகளுடன் அமைந்தது. இவ்வரண்மனையில் ஒவ்வொரு நுணுக்கமான பாகங்களையும் கண்டு இறும்பூதெய்தாதாரில்லை. இவ் வரண்மனைக் குள்ளிருக்கும் கோபுரம் 190 அடி உயரமாய் 8 மாடிகளுடன் உயர்ந்த சிற்ப முறையில் கட்டப்பெற்றது. 1855 வரை இதிலிருந்து எதிரிகளைப் பார்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

மாடமாளிகை

இங்குள்ள மாடமாளிகை குறுகிய படிக்கட்டுகளால் 6 மாடிகளையுடையது. இதற்கு மேல் இன்னும் 5 மாடிகள் இருந்தனவாம். நாயக்க மன்னர்கள் இதிலிருந்தே ஸ்ரீரங்கம் அரங்கநாதர் ஆலயத்தைத் தரிசிப்பராம். இம் மாளிகையின் மேலிருந்த 5 மாடிகள் இடியால் தகர்ந்து மற்றையது எஞ்சியதென்பர்.

மன்னர் மறைந்ததும்.

இரண்டாவது சிவாஜி மன்னர் உடல் நீத்த பின்னர் அரண்மனையிலுள்ள சிறந்த பொருள்களையெல்லாம் பிரிட்டிஷார் திருச்சிக் கோட்டைக்குக் கொண்டு போயினர். 1863-ல் கமிட்டியின் சிலர் யோசனையால் அரண்மனைப் பொருளில் பலவற்றை சென்னை மியூசியத்திற்கும் ஸிம்ஹாசனத்தை இங்கிலாந்துக்கும் கொண்டு போயினர்.

தர்பால் ஹால்

இது மகாராஷ்டிர மன்னர் ஷகாஜி என்பவரால் 2 படிகளாலும், 6 படிகளாலும் அமைக்கப் பெற்றது. எதிர்ப்புறங்களில் மந்திரி பிரதானிகளும் மற்றவரும் இருக்க அமைந்தது. சுவற்றில் மன்னர்களின் படங்களும் சில பதுமைகளும் மல்யுத்த வகைக் காக்ஷிகளும் இருக்கின்றன.

சரஸ்வதி மஹால்.

விளக்குரிய நாமகள் மகிழ்ந்தளித்தாற் போன்று பூவுலகில் தன் கலைகளையெல்லாம் குவித்து வைக்க எண்ணி மயங்குகாலை தஞ்சப்புரி எனும் தஞ்சை இடந்தந்துதவியதென்னல் பொருந்தும். முந்நூற்றுண்டுகள் நாயக்கரும் மாராட்டிர மன்னர்களும் சேகரித்த பொக்கிஷம். 16-ம் நூற்றுண்டு இறுதியும் 17-ம் நூற்றுண்டின் முற்பகுதியுமாய புண்ணிய

காலங்களே இப் பொக்கிஷங்களை அடைந்த பொன்னுட்களாகும். இரண்டாம் சரபோஜி ஆட்சியில் பல சுவடிகளையும் சேகரித்தார். அதுவரை:

சமஸ்கிருதத்தில்	24,627
மகாராட்டிரம்	1,953
தமிழ்	1,206
தெலுங்கு	816

இத்துணை ஓலைச் சுவடிகளையும் எத்துணைச் சிரமங் கொண்டு சேகரித்திருத்தல் வேண்டும். பேரறிஞர் டாக்டர் பர்னல் இம் மஹாலை உலகத்திலேயே பெரிதென உரைத்திருக்கின்றார். 1921க்குப் பிறகு ஜெம்புநாத பட் லாண்டிகே, காகல்கர், பதங்க அவதூதர் இம்மூவரும் 2181 சுவடிகள் சேர்த்துதவியிருக்கின்றனர். இது தவிர சமீப காலத்தில் மகாராஷ்டிர பாஷையில் மோடி எழுத்தில் சில சுவடிகளும் குவிந்திருக்கின்றன. இச் சரஸ்வதி மஹால் சமீப காலம் வரை மன்னர் மரபினர்களால் காக்கப்பட்டும், இதுபோது டிஸ்டிரிக்ட் கலெக்டர், டிஸ்டிரிக்ட் ஜட்ஜ், சீனியர் பிரின்ஸ், ஜூனியர் பிரின்ஸ் உத்தியோகமில்லா பிறிதிருவர் உள்ளிட்ட கமிட்டியாரால் காக்கப்பட்டும் வருவதுடன், 6,426 சுவடிகள் அச்சடிக்கப்பெற்றும் இருக்கின்றன.

சங்கீத மஹால்.

இது சங்கீத முறையினுக் கேற்பக் கட்டியதொன்று. நல்ல வக்கணையுடையது. மதுரை நாயக்கர் இம் மஹாலைக் காப்பியடித்த முறை காண்போர் அறிவர்.

இருட்டு மஹால்.

இதன் உயர்வே உயர்வு. நூதன இஞ்சினியர்கள் முளைத்திராத அக் காலத்து அறிவுடை அறிஞர்கள் கட்டிய இருட்டு

மஹாலுள்சென்று பார்ப்பின் இருள் என்பது அங்கு ஒரு இடத்திலேயே மட்டும் இருந்துவிட்டதோ என ஐயுற வேண்டிவரும். பென்னம்பெரிய தீவட்டி விளக்குகளும் அங்கு தஞ் சத்தியிழந்து தோற்று விடுகின்றன. வளைந்து வளைந்த பாதை. இத்துணைப் பெரிய இருட்டு இடத்தில் சிலுசிலுப்பான காற்று. இப்போது சில பாகம் நீக்கப்பட்டுள்ளது. இன்னும் அம் மஹாலின் சுவற்று மேற்பாகத்தில் உயரிய வேலைப்பாடமைந்த சிறந்த சிற்ப ஓவியங்கள் தீட்டப் பெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் கூர்ந்து கவனிப்பின் முந்தையோரின் அறிவின் வன்மையையும் தொழிலின் நுணுக்கத்தையும் நினைந்து நினைந்து மகிழ்ந்து போகாமல் வேறென்னென் றியம்புவது இவ் வரண்மனைக்குள் எத்துணையோ சுரங்கத் தரைப் பாதைகளும் உண்டு. இப்போது யாவும் பப்ளிக் வர்க்ஸ் டிபார்ட்மெண்டாரின் பராமரிப்பில் பல வகையாய் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

மணிக்கூண்டு.

இது 1833ல் 19 ஆயிர ரூபாய் செலவில் கட்டப்பெற்றதெனினும் இதில் ரூபாய் 12 ஆயிரமும் இடமும் மகாராணிக்குரியதே.

கிறிஸ்தவர்கள்.

16ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸெயிண்ட் பிரான்ஸில் (ரோமன் கத்தோலிக்) நாகையிலிருந்து உபதேசித்துக் கொண்டிருந்தார். 1612ம் ஆண்டில் வேளாங்கண்ணிக் கோயிலும் கட்டப்பட்டது. 1778ல் தரங்கம்பாடியிலிருந்து வந்த சுவார்ட்ஸ் என்பார் 1780ல் மகர்நோம்புச்சாவடியில் பீட்டர் கோயிலொன்றைக் கட்டினார். அஃது மீண்டும் 1829ல் பிஷப் ஹீபர் வேண்டுகோளால் புதுப்பிக்கப்பட்டது. கனிமன்றுல் கட்டியிருந்த ஸ்வார்ட்ஸ் கோவில் 1779ல் சரபோஜி மன்னரின் உதவியால் உறுதியானதாகக் கட்டப் பெற்றது. 1780ல் மகர்நோம்புச்சாவடிக்குக் கிறிஸ்தவர்கள்

குடியேறினர். 1798ம் வருடம் பிப்ரவரி மாதம் 13ந்தேதி சுவார்ட்ஸ் காலமானர். சுவார்ட்ஸ் கோயிலுக்கு மன்னர் சரபோஜியும் ஏராளமான பொருளும் பூமியும் தந்துள்ளார்.

தஞ்சைத் தென் பாதுகாப்புத் தெய்வம்.

சிலோன் அரச பரம்பரை ராணியான சின்ஹளநாச்சி சோழர் உறவு கொள்ள தஞ்சை வந்தபோது காலமானர். அவ் வம்மையைப் புதைத்த இடத்தின் ஞாபகார்த்தமாக இன்று செங்கமலநாச்சி யெனும் பெயருடைய ஆலயமும் இருக்கிறது. இங்கு தை முதல் மங்கல நாட்களில் ஊர்மக்கள் வருடந் தவருது சென்று காணிக்கை செலுத்துகின்றனர்.

சமுத்திரம்.

தஞ்சை மாரியம்மன் கோவில் ரஸ்தா ஓரமாக 3 மைல் நீளமும் 1 மைல் அகலமுங் கொண்ட ஒரு பெருங் கடல் வெட்டி அதில் கப்பலோட விட்டு, மன்னன் மகிஷியை மகிழ்வித்தானும்.

ஸ்ரீ கருவூர்த்தேவர் அருளிய திருவிசைப்பா.

1 உலகெலாந் தொழுவந் தெழுகதிர்ப் பரிதி
ஒன்றுநூ றுயிரகோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம் பச்சோ
அங்ஙனே அழகிதோ வரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலகுலாம் பழனத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

2. நெற்றியிற் கண்ணன் கண்ணின்மின் றகலா
நெஞ்சினில் அஞ்சிலம் பலிக்கும்
பொற்றிரு வடியென் குடிமுழு தாளப்
புகுந்தன போந்தன இல்லை.
மற்றெனக் குறவென் மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

3. சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்
குடைநிழல் விடைமேல் கொண்டுலாப் போதுங்
குறிப்பெனோ கோங்கிணை ரனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்
துக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்
கிடைகெழு மாடத் திஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே

4. வாரியம் போதத் தருகுபாய் விடையம்
வரிசையின் விளக்கலி னடுத்த
சூழலம் பளிங்கின் பாசல ராதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்
காழகில் கமழும் மாளிகை மகளிர்
கங்குல்வா யங்குலி கெழும
யாழொலி சிலம்பும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே

5. எவருமா மறைகள் எவையும்வா னவர்கள்
ஈட்டமுந் தாட்டிருக் கமலத்
தவருமா லவனும் அறிவரும் பெருமை
அடலமழ லுமிழ்தழற் பிழம்பர்
உவரிமா கடலின் ஒலிசெய்மா மறுகில்
உறுகளிற் றரசின னீட்டம்
இவருயால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

6. அருளுமாறு அருளி ஆளுமா றுள
அடிகட அழகிய விழியும்
குருளும்வார் காதுங் காட்டியான் பெற்ற
குயிலினை மயில்செய்வ தழகோ
தரளவான் குன்றில் தண்ணிலா ஒளியும்
தருதுவால் பெருகுவான் றெருவில்
இருளெலாங் கிழியும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே

7. தனிப்பெருந் தாமே முழுதுமப் பிறப்பின்
தளிரிறப் பிலையுதிர் வென்றுல்
நினைப்பருந் தம்பால் சேறலின் றேனு
நெஞ்சிடித் துருகுவ தென்னே
சுனைப்பெருங் கலங்கற் பொங்கையங் கழுநீர்
சூழன்மா ளிகைசுடர் வீசும்
எனைப்பெரும் மணஞ்செய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

8. பன்னெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்னெடுங் கோயில் நெஞ்சு வீற்றிருந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
மின்னெடும் புருவத் திளமயி லனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்னடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

9. மங்குல்சூழ் போதி னொழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத் தொளிப்பார்
அங்கழற் சுடரா மவர்க்கிள வேன
லலர்கதி ரனையர் வாழியரோ
பொங்கெழிற் றிருநீ றழிபொசி வனப்பிற்
புனருளும் பவீர்சடை மொழுப்பர்
எங்களுக் கினிய ரிஞ்சிகும் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

10. தனியரெத் தனியொ ராயிர வருமாந்
தன்மைய ரென்வயத் தினராம்
கனியரத் தருநீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டிய ரட்டவா ரமிர்தர்
புனிதர் பொற்கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்
கினியரெத் தனையு மிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத திவர்க்கே

11. சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பி னிஞ்சிசூழ் தஞ்சை
யிராசரா சேச்சரத் திவரை
அருமருந் தருந்தி யல்லறிர் கருவூ
ரறைந்த சொன்மாலையி ரைந்தின்
பொருண்மருந் துடையோர் சிவபத மென்னும்
பொன்னெடும் குன்றுடை யோரே.

தஞ்சைப் பெரியகோவில் ஸ்ரீ முருகக் கடவுள்மீது ஸ்ரீ அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்.

1. அஞ்சன வேல்விழி மடமாதர்
அங்கவர் மாயையில் அலைவேனே
விஞ்சுறு மாவன தடிசேர
விம்பம தாயருள் அருளாயோ
நஞ்சமு தாவுணும் அரனார்தம்
நன்குமரா வுமை அருள்பாலா
தஞ்சென வாமடி யவர்வாழத்
தஞ்சையில் மேவிய பெருமாளே.

2. அம்பு ராசியிற் கெண்டை சேலொளித்
தஞ்ச வேமணிக் குழைவிசும்
அங்க ணாரிடத் தின்ப சாகரத்
தங்கி மூழ்குமிச் சையினாலே
எம்பி ரானுனைச் சிந்தி யாதொழித்
திந்த்ர சாலஇப் ப்ரமைதீர

இங்கு வாவெனப் பண்பி ஞலமைத்
தெங்கு மானமெய்ப் பொருள்தாராய்
கொம்பு போலிடைத் தொண்டை போலிதழ்க்
கொண்டல் போல்குழற் கனமேருக்
குன்று போல்முலைப் பைங்கி ராதியைக்
கொண்ட கோலசற் குணவேலா
சம்ப ராரியைக் கொன்ற தீவிழிச்
சம்பு போதகக் குருநாதா
சண்ட கோபுரச் செம்பொன் மாளிகைத்
தஞ்சை மாநகர்ப் பெருமாளே.

3 கந்தவார் குழல்கோதி மாலையைப்பு னைந்து
மஞ்சளா லழகாக மேனியிற்றி மிர்ந்து
கண்டமா லைகளான ஆணிமுத் தணிந்து தெருவூடே
கண்டபே ரையெலாம வாவினீற்கொ ணர்ந்து
வண்பயோ தரபார மேருவைத்தி றந்து
கண்களா கியகூர வேலைவிட்டெ றிந்து விலைகூறி
வந்தபேர் களையேகை யாலெடுத்த ணைந்து
கொண்டுதே னிதழூறு வாயைவைத்த ருந்தி
மந்தமா ருதம்வீசு மாயலிற்பு ணர்ந்து மயல்பூணு
மங்கைமா ரநுபோக தீவினைப்ப வங்கள்
மங்கியே கிடுமாறு ஞானவித்தை தந்து
வண்டுலா வியநீப மாலைசற்றி லங்க வருவாயே
இந்த்ரதா ருவைஞால மீதினீற்கொ ணர்ந்த
சங்கபா ணியனுதி கேசவப்ர சங்க
னென்றுவாழ் மணிமார்பன் வீரவிக்ர மன்றன்
மருகோனே
எண்டிசா முகவேலை ஞாலமூற்று மண்டு
கந்ததா ருகசேனை நீறுபட்டொ துங்க
வென்றுபே ரொளிசேர்ப் ரகாசம் விட்டிலங்கு
கதிர்வேலா
சந்த்ரசே கரிநாக பூஷணத்தி யண்ட
முண்டநா ரணியால போஜனத்தி யம்மை
தந்தபூ ரணஞா வேள்குறத்தி துஞ்சு மணிமார்பா
சண்டநீ லகலாப வாசியிற் றிகழ்ந்து
கஞ்சன்வா சவன்மேவி வாழ்பதிக்கு யர்ந்த
தஞ்சைமா நகர்ராஜ கோபுரத்த மர்ந்த பெருமாளே.



As. 10. வெற்றிவேல் பிரஸ், தஞ்சை.